**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின் செயல்முறைகள் முன்னிலை – திரு.பா.மணிமாறன்,**

செ.மு.ந.க. எண்.19409/ 2020/ பஅ3 நாள் : 13.05.2024

பொருள்: கருணை அடிப்படை நியமனம் – ஊரக வளர்ச்சி அலகு – திருவள்ளூர் மாவட்டம் – திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம் – நெமிலி ஊராட்சி – திரு.B.கோவிந்தசாமி(லேட்), ஊராட்சி செயலர் என்பவர் 10.04.2020 அன்று பணியிடைக் காலமானவர் – வாரிசுதாரர் திரு.G.ராஜசேகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் ஊர்நல அலுவலர் நிலை-2-ஆக பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்யப்பட்டு அரசாணை வரப்பெற்றுள்ளது – பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

படிக்கப் பட்டது: அரசாணை (3ப) எண்.04, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–5) துறை, நாள்.15.03.2024

உத்தரவு–

திருவள்ளூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகு, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், நெமிலி ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து 10.04.2020 அன்று பணியிடைக்காலமான திரு.B.கோவிந்தசாமி(லேட்) என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.G.ராஜசேகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் ஊர்நல அலுவலர் நிலை-2-ஆக பணிநியமனம் வழங்கப்பட்டது. தற்போது பார்வையில் காணும் அரசாணையில் தனியர் ஊர்நல அலுவலர் நிலை-2-ஆக பணியில் சேர்ந்த நாளான 24.11.2021 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி அரசாணையின் அடிப்படையில் தனியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 24.11.2021 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திருவள்ளூர்.

பெறுநர்
திரு.G.ராஜசேகர்
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (சத்துணவு பிரிவு)
திருவள்ளூர். (சார்ந்த அலுவலர் மூலமாக)

நகல்

1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு) திருவள்ளூர். (தனியருக்கு சார்வு செய்யும் பொருட்டு)
2. பஅ3 இருப்புக்கோப்பு

,69'

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவள்ளூர் மாவட்டம் – பணியிடைக் காலமான ஊராட்சி செயலர், திரு.B.கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு.G.ராஜசேகர், இளநிலை உதவியாளர் நிலையில் ஊர் நல அலுவலர் நிலை–2 பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–5) துறை

அரசாணை (3ப) எண்.04

நாள் 15.03.2024
சோபகிருது, பங்குனி 02
திருவள்ளுவர் ஆண்டு 2055.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(பஅ5) துறை, நாள் 13.07.2015
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
3. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வ) அவர்களின் செயல்முறை ந.க.எண்.19409/2020/பஅ3, நாள் 22.11.2021.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.21113/2022/டி1, நாள் 02.06.2022.
5. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 08.03.2023

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில், நெமிலி ஊராட்சியில், ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 10.04.2020 அன்று காலமான திரு.B.கோவிந்தசாமி என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.G.ராஜசேகர் என்பவருக்கு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி, கருணை அடிப்படையில், திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில், இளநிலை உதவியாளர் நிலையில் ஊர் நல அலுவலர் நிலை–2 ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 24.11.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சி இயக்குநர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.G.ராஜசேகர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 27.07.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 14.06.1991 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 29 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்று, இரண்டு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில், அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில், இளநிலை உதவியாளர் நிலையில் ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.G.ராஜசேகர் என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் ஊர் நல அலுவலர் நிலை-2-ஆக பணியில் சேர்ந்த நாளான 24.11.2021 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

ந.க.எண்.19409/2020/அ3

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
திரு.G.ராஜசேகர், இளநிலை உதவியாளர் நிலையில்
ஊர்நல அலுவலர் நிலை-2, திருவள்ளூர் மாவட்டம்.
(**வழி**: மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூலம் மற்றும் கணக்குகள் துறை ஆணையர், சென்னை-35
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்,
திருவள்ளூர் மாவட்டம்.

**நகல்:**
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

ந.க.எண். 19409/2020/அ3

மாவட்ட ஆட்சியரகம்
(வளர்ச்சிப்பிரிவு)
திருவள்ளூர் மாவட்டம்.
நாள். 13.05.2024.

// சார்பு செய்யப்படுகிறது //

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
(வளர்ச்சி) திருவள்ளூர்.

13/5/24

பெறுநர்:

திரு ஜெ. ராஜசேகர்,
இளநிலை உதவியாளர்
மாவட்ட ஆட்சியரகம் (சத்துணவுப்பிரிவு)
திருவள்ளூர் மாவட்டம்.

நகல்:

1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு)
திருவள்ளூர் மாவட்டம்.